Registered as a news paper in Ceylon.

# தொண்டன்

கத்தோலிக்க மாத ஏடு.

| மலர் 3 | மட்டக்களப்பு | பங்குனி — 1971 | விலை 30 | இதழ் 3 |
|---|---|---|---|---|

## கர்தினுல் கூறே ஆண்டகை வாழ்க!



**இம்மாதம் 7ம் திகதி கொழும்பு அதிமேற்றிராசனத்தின் பேராயரும், நம் ஏக கர்தினுலும் ஆகிய தொமஸ் பெஞ்சமின் கூறே ஆண்டகை அவர்கள், தமது ஆயர் அபிஷேகத்தின் 25வது ஆண்டு நிறைவுவிழாவைக் கண்டடையப் போகிருர் என்ற செய்தியை அறிந்து மகிழ்ச்சியடைகின்றேம்.**

தொமஸ் கூறே ஆண்டகை அவர்கள் 1945ம் ஆண்டு மார்கழி 14ம் திகதி கொழும்பின் உதவிப் பேராயராக நியமனம் பெற்று, 1946ம் ஆண்டு பங்குனி 7ம் திகதி ஆயர் அபிஷேகம் பெற்றூர். கொழும்பின் பேராயர் பேரருட் பெருந்தகை ஜோண் மசோன் ஆண்டகை அவர்கள் 1947ம் ஆண்டு ஆடி 26ம் திகதி சடுதியாக மரணத் திரையுள் மறைந்தபோது, கூறே ஆண்டகை அவர்கள் கொழும்பின் பேராயர் பொறுப்பை ஏற்றூர்.

அன்று தொட்டு இன்று வரை தமது மேற்றிராசனத்தை நல்லாயருக்குரிய பண்புடன் கண்ணுங்கருத்துமாகக் கண்காணித்து, யாவர்க்கும் நற்பணிபுரிந்து வருகின்றூர். அவரது விருதுவாக்கியம் ''பணிவிடை பெறுவதற்கன்று, பணிவிடை புரியவே'' (மத். 20, 28) என்ற நம் ஆண்டவரின் அருள்வாக்கே என்பது இங்கு குறிப்பிடற்பாலது.

நம் பரிசுத்த தந்தை 6வது சின்னப்பர், பேராயர் தொமஸ் கூறே ஆண்டகையின் ஞான ஆட்சித் திறமையை அவதானித்து, அவரை 1965ம் ஆண்டு தை 10ம் திகதி கருதினுல்

(16ம் பக்கம் பார்க்கவும்)

**"திருச்சட்டத்தை அழிக்கவல்ல...... நிறைவேற்றவே வந்தேன்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இறைவழிபாட்டுச் சிந்தனைகள்

(துணை ஆயர்)

## 23. ஞானஸ்நானத்தின் மாண்பும், அவசியமும்

கடவுளின் அரசில் நுழைவதற்கும் முடிவில்லா வாழ்வை அடைவதற்கும் ஞானஸ்நானம் என்னும் திருவருட்சாதனமே வாசலாக விளங்குகின்றது. ''ஒருவன் நீரினாலும் ஆவியினாலும் பிறந்தாலன்றி கடவுளுடைய அரசில் நுழைய முடியாது'' (அரு. 3,5) என்றும், ''விசுவசித்து ஞானஸ்நானம் பெறுபவன் மீட்புப் பெறுவான், விசுவசியாதவனுக்குத் தண்டனை கிடைக்கும்'' (மாற். 16,16) என்றும் கிறிஸ்துநாதர்தாமே கூறினார். அன்றியும், இந்த ஞானஸ்நானத்தைத் தாமே கொடுத்துக்காட்டி (அரு. 3,22), ''நீங்கள் போய் எல்லா மனிதரையும் சீடராக்கி, பிதா சுதன் பரிசுத்த ஆவியின் பெயரால் ஞானஸ்நானங் கொடுங்கள்'' (மத். 28,19) என்று அப்போஸ்தலர்களுக்குக் கட்டளை கொடுத்து அதைத் திருச்சபையிடம் ஒப்படைத்தார்.

ஞானஸ்நானம் என்னும் திருவருட்சாதனம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயராலும் பரிசுத்த ஆவியாலும் நமது பாவக் கறைகளைக் கழுவிப் போக்குகின்றது. நாம் பரிசுத்தரும் இறைவனுக்கு ஏற்புடையவரும் ஆக்கப்படுகிறோம் (1 கொரி. 6,11). கிறிஸ்துவை அணிந்துகொண்டதால் (கலா. 3,27) இறைவனின் சொந்த வாழ்வில் (இயல்பில்) பங்குகொள்கிறோம் (2 இரா 1,4); இறைவனின் பிள்ளைகளாக்கப்படுகிறோம் (உரோ. 8,15). இவ்வாறு, ''புதுப்பிறப்பைத் தரும் முழுக்கினாலும் புத்துயிர் அளிக்கும் பரிசுத்த ஆவியாலும் இறைவன் நம்மை மீட்கிறார் (தீத்து 3,5). இஃதால் நாம் கடவுளின் ஆலயம் ஆகின்றோம் (1 கொரி. 3,16), அதிபரிசுத்த திரித்துவக் கடவுளுடன் தோழமை கொண்டு அவருக்கே அர்ப்பணிக்கப்படுகிறோம்.

மேலும், ஞானஸ்நானத்தால் மாந்தர் திருச்சபையுடன் இணைக்கப்படுகின்றனர். இறைமக்கள் சமுதாயத்தின் உறுப்பினர் ஆகின்றனர்; கடவுளுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஆகின்றனர். அப்போஸ்தலர் இறைவாக்கினர் இவர்களை அடிக்கல்லாகவும், கிறிஸ்து இயேசுவையே மூலைக்கல்லாகவும் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமாகின்றனர் (எபே 2,19–20). கிறிஸ்தவ மறையின் வழிபாட்டை நிகழ்த்த அழியாத முத்திரையால் குறிக்கப்பட்டு, அரச குருத்துவ திருக்கட்டமாகின்றனர் (1 இரா. 2,9). இவ் அழியாத முத்திரையினிமித்தமே ஞானஸ்நானத்தை ஒரு முறைக்குமேல் பெற முடியாது.

மேற்கூறிய விளைவுகளையெல்லாம் ஞானஸ்நானம் கிறிஸ்துவின் இறப்பு உயிர்ப்பு என்னும் பாஸ்கா மறைபொருளின் வல்லமையலேயே உண்டுபண்ணுகின்றது. ''ஞானஸ்நானம் என்னும் திருவருட்சாதனம் ஆண்டவர் ஏற்படுத்தின முறையின்படி ஒழுங்காக அருளப்பட்டுத் தகுந்த ஆன்ம ஆயத்தத்தோடு பெற்றுக்கொள்ளப்படும்போது, சிலுவையில் அறையப்பட்டு மாட்சிமைப்படுத்தப் பெற்ற கிறிஸ்துவுடன் மனிதன் உண்மையில் இணைக்கப்படுகிறான்; இறைவாழ்வில் பங்கெடுக்குமாறு மறுபிறப்புப் பெறுகிறான். 'ஞானஸ்நானத்தில் நீங்கள் கிறிஸ்துவோடு புதைக்கப்பட்டிருக்கிறீர்கள். இறந்தோரிடமிருந்து அவரை உயிர்த்தெழச்செய்த கடவுளின் ஆற்றல்மீது கொண்ட விசுவாசத்தால் அவரோடு நீங்களும் உயிர்த்தெழுந்தீர்கள். நீங்கள் பாவிகளாய் இருந்ததால் .... இறந்தவர்களாயிருந்தீர்கள். உங்களை இறைவன் மீண்டும் அவரோடு உயிர்பெறச் செய்தார்' (கொலோ. 2,12–13) என்ற அப்போஸ்தலரின் கூற்றுப்படி இது நிகழ்கின்றது'' (கிறிஸ்தவ ஒன்றிப்பு இ. 22). இவ்வாறு, ஞானஸ்நானம் பெறுவோர் கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளைத் தம்மில் ஞானவிதமாய் புதுப்பிக்கின்றனர். ஆகவே, ஞானஸ்நானத் திருச்சடங்கு கிறிஸ்துவின் உத்தானத்திற்குரிய ஆனந்த அக்களிப்பை வெளிக்காட்ட வேண்டும். அது பொதுவாக கிறிஸ்துவின் பாஸ்கா மறைபொருளின் நினைவு நாளாகிய ஞாயிறுவாரத்திலும், சிறப்பாக

[14ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இலங்கையின் புதிய அரசியலமைப்புத் திட்டமும் மனிதனின் அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும்.

சென்ற தை மாதம், அரசியலமைப்பு அலுவல்கள் அமைச்சர் வழிகாட்டு விடயக் குழுவுக்குச் சமர்ப்பித்த வரைவு அடிப்படைத் தீர்மானங்களுள் 5 வது தீர்மானம் சில அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் குறிப்பிட்டது. இலங்கைக் கத்தோலிக்க ஐக்கிய சங்கம் இவைகளை அலசி ஆராய்ந்து சில திருத்தங்களையும், சேர்க்கைகளையும் மேற்படி அமைச்சர் அவர்கட்குச் சமர்ப்பித்துள்ளது. அவை இங்கு கீழ்க்கோடிடப்பட்டு காட்டப் படுகின்றன.

**பராதீனப்படுத்தவோ, மாற்றவோ கூடாத அடிப்படை உரிமைகளும் சுதந்திரங்களும்.**

5. அரசிமலமைப்பு அடிப்படை உரிமைகள் சுதந்திரங்கள் பற்றிய ஒரு பிரகடனத்தை அடக்கியிருத்தல் வேண்டும். அத்தகைய பிரகடனத்தில் பின்வரும் உரிமைகளும் சுதந்திரங்களும் அடங்கியிருத்தல் வேண்டும். இவை எவ்விதத்திலும் பராதீனப்படுத்தவோ, மாற்றவோ கூடாதனவாய் இருக்க வேண்டும்:

(1) சட்டத்தின் முன்பு ஆட்கள் எல்லாரும் சமமானவர்கள்; அத்துடன் அவர்கள் சட்டத்தின் மூலம் கிடைக்கும் சமமான பாதுகாப்புக்கும் உரிமையுடையவர்கள்.

(2) சட்டத்தின் பிரகாரமாகவன்றி, ஆள் எவரும் அவரது உயிரையோ, சுதந்திரத்தையோ, சொத்தையோ, தனிப்பட்ட பாதுகாப்பினையோ இழத்தலாகாது.

(தனிச்சொத்துரிமை மனிதனின் அடிப்படை உரிமைகளுள் ஒன்றாகும். அது ஐக்கிய நாடுகளின் தாபனம் வெளியிட்ட அடிப்படை உரிமைகளின் சாசனத்தில் 17ம் இலக்கத்தில் இடம் பெற்றுள்ளது)

((3), (4), (5) ஆகிய சரங்களில் குறிக்கப்பட்டுள்ள உரிமைகள் பிரசைகளுக்கு மட்டுமல்ல, எல்லா மனிதருக்குமே பொதுவானவை. ஆகவே, 'பிரசை' என்ற சொல் 'ஆள்' என்று மாற்றப்பட வேண்டும்)

(3) சட்டத்தின் பிரகாரமாக அன்றி ஆள் எவரும் கைது செய்யப்படவோ, கட்டுக்காவலில் வைக்கப்படவோ, சிறையிலிடப்படவோ, தடுத்து வைக்கப்படவோ கூடாது.

(4) சிந்தனை செய்யும் சுதந்திரம், மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம், மத சுதந்திரம் என்பன சார்பான உரிமை ஒவ்வொரு ஆளுக்கும் இருத்தல் வேண்டும். தான் விரும்பும் சமயம் அல்லது நம்பிக்கையொன்றை உடையவராயிருத்தல், அல்லது மேற்கொள்ளுதல் சார்பான சுதந்திரமும், தனியாக அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து, பகிரங்கமாகவேனும், அந்தரங்கமாகவேனும், தனது சமயத்தை அல்லது நம்பிக்கையை, வழிபாட்டிலும், அனுசரிப்பிலும், செயற்பாட்டிலும், போதிப்பதிலும் வெளிக்காட்டுதல் சார்பான சுதந்திரமும், இந்த உரிமையில் அடங்கும்.

(5) ஒவ்வொரு ஆளுக்கும், ஏனையவர்களுடன் சேர்ந்து தனது சொந்தக் கலாசாரத்தை அனுபவிப்பதற்கும், அபிவிருத்தி செய்வதற்கும் உரிமையுண்டு. (இதன்பின், பின்வரும் தனிச்சொத்துரிமை பற்றிய சரம் சேர்க்கப்பட வேண்டும்)

''சட்டத்தின் பிரகாரம் சொத்தைப் பெறவும், வைத்திருக்கவும், பராதீனப்படுத்தவும் எல்லாப் பிரசைகளுக்கும் உரிமையுண்டு' ,

(இதன்பின் குடும்பத்தின் உரிமைகள் சேர்க்கப்பட வேண்டும். இவ் உரிமைகளை ஐ. நா. தா. மனித உரிமைகளின்

[4ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இலங்கையின் புதிய......

[3ம் பக்கத் தொடர்ச்சி]

சாசனம் 16ம் இலக்கத்தில் குறிப்பிடுகின்றது)

''குடும்பமே சமுதாயத்தின் இயல்பான, அடிப்படையான குழு. ஆகவே, அதன் உரிமைகள் சமுதாயத்தினுலும் அரசாங்கத்தினுலும் பாதுகாக்கப்படவேண்டும்''.

(இதன்பின் ஐ. நா. தா. மனித உரிமைகளின் சாசனத்தின் இ. 26 (1) லும் (3) லும் குறிக்கப்படும் கல்வி உரிமைகள் சேர்க்கப்பட வேண்டும்)

''கல்வியறிவு பெற ஒவ்வொரு ஆளுக்கும் உரிமை உண்டு. ஆரம்ப, அடிப்படைப் படியில் கல்வி இலவசமாய் அளிக்கப்படவேண்டும். அது கட்டாயமானதாகவும் இருக்க வேண்டும். தொழில்நுட்ப, உத்தியோக கல்விக்குப் பொதுவான வசதிகள் அளிக்கப்படவேண்டும். தகைமைக்கேற்ப உயர்தர கல்விபெற எல்லோர்க்கும் வசதிகள் அளிக்கப்பட வேண்டும்.

தங்கள் பிள்ளைகளுக்கு அளிக்கவேண்டிய கல்வியின் தன்மையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை முதல்முதல் பெற்றோருக்கே உண்டு.''

(6) அமைதிவாய்ந்த முறையிலே ஒன்றுகூடுவதற்கும், ஒருங்கு சேர்வதற்குமான சுதந்திரம் சார்பான உரிமை எல்லாப் பிரசைகளுக்குமுண்டு.

(7) பேச்சுச் சுதந்திரம், வெளியிடுதல் உட்பட கருத்துத் தெரிவித்தற் சுதந்திரம் என்பன சார்பான உரிமை, ஒவ்வொரு பிரசைக்கும் தனி ரீதியிலும் குழு ரீதியிலும் இருத்தல் வேண்டும்.

(8) மத்திய அரசாங்க சேவை, உள்ளூர் ஆட்சிச் சேவை, அரசாங்கம கூட்டுத்தாபனச் சேவை என்பனவற்றிலும், இவைபோன்ற பிறசேவைகளிலும் நியமனம் பெறுவதற்கு, ஏனைய விதத்தில் தகைமைவாய்ந்த எந்தப் பிரசைக்கும், இனம், சமயம், சாதி, அல்லது பால் காரணமாக அத்தகைய நியமனத் தொடர்பில் வேறுபாடு காண்பிக்கப்படலாகாது; எனினும், அத்தகைய சேவைகளின் நன்மையைக் கருதி குறிப்பிடப்பட்ட பதவிகள், அல்லது பதவிவகைகள் ஆண்களுக்கு அல்லது பெண்களுக்கு ஒதுக்கப்படலாம்.

(9) ஸ்ரீ லங்காவில் தான் விரும்பும் இடத்தில் வசிப்பதற்கும், தடையின்றிப் பிரயாணஞ் செய்வதற்குமான சுதந்திரம் ஒவ்வொரு பிரசைக்கும் இருத்தல் வேண்டும்.

(10) தேசிய ஐக்கியம், ஒருமைப்பாடு, தேசிய பாதுகாப்பு, தேசிய பொருளாதாரம், பொதுசன இடரில்லா நிலை, பொதுசன சுகாதாரம், அல்லது ஒழுக்கப்பண்பின் பாதுகாவல், அல்லது மற்றவர்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாத்தல் என்பன சார்பான நலன்களைக் கருத்திற்கொண்டு, சட்டத்தினுல் விதிக்கப்படும் நியாயமான மட்டுப்பாடுகளுக்கு அமைய, அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்படும் அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் பிரயோகித்தலும் செய்ற்படுத்தலும் இருத்தல் வேண்டும்.

22. தேசிய சபையினுல் ஆக்கப்படும் எந்தச் சட்டத்தினதும் செல்லுபடியாகும் தன்மைபற்றி விசாரிக்கவோ தீர்ப்பு வழங்கவோ, நீதிபரிபாலனஞ் செய்யும் எந்த நிறுவனமேனும், அல்லது ஏனைய நிறுவனமேனும், ஆளேனும், அதிகாரியேனும் தத்துவமுடையவராய் இருந்தலாகாது. எனினும், அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதிக்கும் எந்தச் சட்டத்தைப் பற்றியும் விசாரணை நடத்தித் தீர்ப்பு வழங்க உயர்தர நீதிமன்றம் ஒன்றுக்கே உரிமை உண்டு.

குறிப்பு: ஐ. நா. தா. அடிப்படை உரிமைகளின் சாசனத்தை ஏற்றுக்கொண்ட நாடுகளுள் இலங்கையும் ஒன்ருகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாணவர் மன்றம்

## புனித லூக்காஸ் சுவிசேசம்

*(ஊ) உவமைகள் மூலம் போதித்தல்*

அருட்திரு. R. S. லோப்பு அடிகள்.

### நல்ல சமாரியன் உவமை
10, 25–37.

புகழ் மிக்க போதகர், சீஷர்களுடன் கலந்துரையாடிக் கொண்டிருக்கிறார். அங்கிருந்த சட்ட வல்லுநன் ஒருவன், இயேசுவில் பிழைபிடிக்க வேண்டுமென்ற நோக்குடன் அல்ல, தனது சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளும் முகமாக எழுந்து நின்று: ''போதகரே முடிவில்லாத வாழ்வுபெற, நான் செய்ய வேண்டியதென்ன!'' என்று வினவினான். இக் கேள்வியைப் பயன்படுத்தி, இயேசு, அங்கிருந்தவர்களுக்கும், நமக்கும் பயன்படக் கூடிய **சன்மார்க்க உவமை** ஒன்றை (Moral Parable) எடுத்துக் கூறுகின்றார்.

சட்டவல்லுநன் வாயிலிருந்தே, அவன் கேள்விக்கு மறுமொழியை, இயேசு எடுக்கிறார். சட்டமெல்லாம் படித்த ஒரு நபர் என்ற முறையில், சட்டப் புத்தகத்தில், இக் கேள்வியைப் பற்றி, என்ன எழுதியிருக்கிறது சொல்லும் பார்க்கலாம் என்கிறார். தமக்குச் சட்டம் நன்கு தெரியும் என்று காட்ட விரும்பிய அவன், உடனே **உபாகமம், லேவியர் ஆகமம்** என்பவற்றிலிருந்து மறுமொழியை எடுத்துக் கூறுகின்றான். (உபாகமம் 6, 5: லேவியர் ஆகமம் 19, 18). அவன் கூறிய பதில் முற்றிலும் சரி என்று கூறிய இயேசு, ''இப்படியே செய்யும் வாழ்வீர்'' என்றார்.

தன் கேள்விக்குத் தன்னையே கொண்டு மறுமொழி சொல்ல வைத்ததை உணர்ந்த சட்டவல்லுநன், கேள்வி அவ்வளவு சுலபமானது அல்ல என்று காட்டவிரும்பி, உடனே இன்னொரு கேள்வியைத் தொடுக்கின்றான். அந் நேரத்தில், இக் கேள்வியைப்பற்றி, யூத மக்களிடையே பல அபிப்பிராயங்கள் நிலவி வந்தன. ''**என் அயலான் யார்?**''. அவர்களில் சிலர்: ''அயலான்'' என்றால், யூத மக்களை மாத்திரம் குறிக்கும் என்றார்கள். வேறு சிலர்: ஒருவனின் எதிரியை விடுத்து, நண்பர்களையே குறிக்கும் என்றனர். இன்னும் சிலர்: சமாரியர், ஆயக்காரர், பாவிகள், அயலவராக இருக்க முடியாது, நீதிமான்கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் பரிசேயர் மாத்திரம் அயலவர் என்று மடிப்பித்தனர். ஆனால், இயேசு கூறியதாவது: ஆபத்திலிருக்கும் எவனும், உனது உதவி தேவைப்படும் ஒவ்வொருவனும், உனது அயலவன் என்பதை நல்ல சமாரியன் உவமை மூலம், மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றார்.

சட்டவல்லுநன் முன்னிலையில் உவமையை **எடுத்து** கூறுகிறார் இயேசு. அவன் **கேள்விக்கு** அவனையே கொண்டு பதில் சொல்ல வைக்கிறார். ''கள்வர் கையில் அகப்பட்டவனுக்கு, இம் மூவருள் எவன் அயலான் என்று உமக்குத் தோன்றுகின்றது?'' என்றார். அதற்கு சட்டவல்லுநன், ''அவனுக்கு இரக்கம் காட்டியவன்தான்'' என்றான். (அதாவது: ஒருவனுடைய எதிரிகூட, அவனுடைய அயலவனாக இருக்க முடியும்). இயேசு, ''நீரும் போய் அவ்வாறே செய்யும்'' என்று கூறினார். ஒருவனுடைய **நித்திய வாழ்வு, அறிவில்** மாத்திரமல்ல, ஆனால் **ஆற்றலில்** தங்கியிருக்கிறது என்று இயேசு சொன்னார். (10, 28ம், 37ம்). தேவ அன்பு ஒருவனில் உண்மையாக இருந்தால், அது பிறர் அன்பில் நிட்சயமாக முற்றுப்பெற வேண்டும். ''நான் கடவுளுக்கு அன்பு செய்கிறேன் என்று சொல்லிக் கொண்டு, ஒருவன் தன் சகோதரனை வெறுத்தால், அவன் பொய்யன்,'' என்று புனித அருளப்பர், தமது திருமுகத்தில் திட்டவட்டமாகக் கூறுகிறார். (1 அரு. 4, 20)

மற்றவர்கள் எமக்கு எதைச் செய்யக் கூடாது, சொல்லக்கூடாது என்று நாம் விரும்புகிறோமோ, அதை நாமும் மற்றவர்களுக்கு செய்யவோ சொல்லவோ கூடாது. (லூக். 6, 31: மத். 7, 12). இது எல்லா மனிதர்களையும் குறிக்கும். ஆனால், நாம் எல்லோரையும், ஒரே அளவாக அன்பு செய்ய வேண்டும் என்றோ அல்லது எல்லோரையும், ஒரே அளவுக்கு நேசிக்க வேண்டுமென்றோ அர்த்தமில்லை.

வழியில் காயப்பட்டு, குற்றுயிராய் கிடப்பவன் ஒரு யூதன். தன் குல எதிரிக்கு உதவி

(6ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மாணவர் மன்றம்......

[5ம் பக்கத் தொடர்ச்சி]

செய்கிறுன் ஒரு நல்ல சமாரியன். இயேசு, நல்ல சமாரியனைப் போன்று, இரக்கமுள்ளவர். எதிரியையும், தன் சினேகிதனைப் போன்று பாவிக்கின்றவர். மனித சமுதாய, காயப்பட்டு, குற்றுயிராய், வாழ்க்கையென்னும் வழியில், தவிக்கிறதை இயேசு என்னும் நல்ல சமாரியன் கண்ணுற்று, பாவத்தால் நாம் அவரின் எதிரியாக இருந்த போதும், நம்மைக் காப்பாற்றி, குருவின் கையில் ஒப்படைத்து, அருள்களினுல் நிரப்புகிருர். வழியில் காயப்பட்ட அவன், மிகவும் நன்றியுள்ளவனுகவும். தன் முழு நம்பிக்கையையும் நல்ல சமாரியனில் போட்டு விடுகிருன். அதே போன்று நாமும், இயேசுவின் மட்டில், மிகவும் நன்றியுள்ளவர்களாகவும், எமது முழு நம்பிக்கையையும் இயேசுவில் வைக்க வேண்டும்.

**காய்க்காத அத்திமரம்**
**13. 1–9.**

இயேசு மக்களுக்கு இந்த உவமையைக் கூறுமுன், பலருடைய மனதிலிருந்த தப்பபிப்பிராயம் ஒன்றை நீக்க முயற்சிக்கிருர். துன்பப்படுகிறவர்கள், கொலை செய்யப்படுகிறவர்கள், விபத்தில் அகப்படுகிறவர்கள் அனைவரும் கடவுளால் தண்டிக்கப்படுகிறவர்கள் என்று மக்கள் நினைத்தார்கள் இது பிழையான ஒரு அபிப்பிராயம் என்று கூறிய இயேசு, அப்படியான சம்பவத்தைக் கண்ணுறும் மக்கள், இப்படி இவர்களுக்கு ஏன் நடக்க வேண்டுமென்று சிந்தித்து, நேரத்தை வீணுக்காமல், தங்கள் பாவங்களுக்காக உடனே மனஸ்தாபப்படுவதற்கு, இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என்று எண்ணவேண்டும். ஏனெனில் காலம் தாழ்த்தக்கூடாது; இறை அரசு சமீபித்துள்ளது. கலிலேய யாத்திரிகர்கள், தேவாலயத்தில், பிலாத்துவின் படையினுல் கொல்லப்பட்டனர், என்ற செய்தியைக் கொண்டு வந்தவர்களுக்கு பதில் கொடுக்கும் முகமாக, இது கூறப்பட்டது. இது போன்ற வேறு அழிவுகளும் இயேசுவின் மனதிலிருந்திருக்கலாம்.

காய்க்காத அத்திமரம், இஸ்ருயேல் மக்களைக் குறிக்கின்றது. மூன்று ஆண்டு காலம், இயேசுவின் மூன்று வருட பகிரங்க வாழ்க்கையைக் குறிக்க வேண்டிய அவசியமில்லை. மக்கள் மனஸ்தாபப்படுவதை, நாளாந்த வாழ்க்கையில், மற்றவர்கள் காணக்கூடியதாக இருத்தல் வேண்டும். கனியைக் கொண்டு அதன் மரத்தை அறிய முடியும். கடவுளால் தெரிந்தெடுக்கப்பட்டு, விசேஷ விதமாக நேசிக்கப்பட்ட இஸ்ருயேல் மக்கள், எதிர்பார்த்த அளவுக்கு நடக்கவில்லை; பயனைக் கொடுக்கவில்லை. புனித ஸ்நாபக அருளப்பர் கூறுகிருர்: ''நற்கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு தீயில் போடப்படும்.'' இஸ்ருயேல் மக்களுக்குக் கொடுக்கப்பட்ட கடைசிச் சந்தர்ப்பம் இது. இதை நன்கு பாவித்து, இஸ்ருயேல் மக்கள் சமுதாய ரீதியில் தங்கள் பாவங்களுக்கு மனஸ்தாபப்பட்டு, மன்னிப்படைய வேண்டுமென்பது கிறீஸ்துவின் வேண்டுகோள். ★

---

மாணவர் மன்றம்

# கிறிஸ்தவ போதக வழிகாட்டி

__பொதுவான குறிப்புகள்.__

க. பொ. த. ப. (சாதாரண) பரீட்சைக்குரிய ரே. க, கிறிஸ்துவத்தின் **புதிய பாடத் திட்டம்** இரு பாகங்களைக் கொண்டுள்ளது. 1. புனித லூக்காஸ் சுவிசேஷம். 2. கிறிஸ்தவ போதகம்.

**கிறிஸ்தவ போதகம்** இரு பகுதிகளைத் தன்னுள் அடக்கியுள்ளது. (அ) **மனிதன் மேல் கடவுளின் அன்பு.** (இ) **இறையன்புக்கு மனிதனின் பதிலன்பு.** இவ்விரு பகுதிகளும் ''**கத்தோலிக்க திருமறை விளக்கம்**'' என்ற நூலைத் தழுவியே கற்கப்பட வேண்டும். எனவே, இந்நூலிலுள்ள பாடங்களுள் மிகப் பிரதானமான 81 பாடங்கள் தெரிந்தெடுக்கப்பட்டு, இரு பகுதிகளின் கீழும் சில அலகுகளின் கீழும் வகுக்கப்பட்டுள்ளன. இப்பாடங்களைப் படிப்பதற்கு ''கத்தோலிக்க திருமறை விளக்கம்'' **இன்றிய**

[7ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கிறிஸ்தவ போதக......

(6ம் பக்கத் தொடர்ச்சி)

**மையாத கைநூலாகும்.** முதல் முதல் மாண வர்கள் புத்தகத்திலுள்ள பாடத்தைக் கவ னத்துடன் வாசித்து விளங்கிக்கொள்ளவேண் டும். அல்லது அது விளங்காவிடின், ஆசிரி யரிடமிருந்து போதிய விளக்கம் பெறவேண் டும். மாணவரின் அறிவை ஆழமாக்குவதற் காக பாடத்தில் ''சிந்தித்துப்பார்'' என்ற பகுதி உண்டு. இதிலுள்ள வினாக்களுக்குத் தகுந்த விடைகள் கண்டுபிடிக்கப்பட வேண் டும். தடித்த எழுத்துகளில் அச்சிடப்பட் டுள்ள வினா விடைகள் **மனப் பாடம் செய் யப்பட வேண்டும்**

மாணவர்கள் கிறிஸ்தவ போதகத்தைக் கற்பது அறிவை வளர்ப்பதற்கும் பரீட்சை யில் சித்தி எய்துவதற்கும் மட்டுமல்ல, வத உண்மைகளை நாளாந்த வாழ்க்கை யோடு தொடர்புபடுத்தி, கடவுளின் அன் பைத் தமது உள்ளத்தில் வளர்த்து, உத்தம கிறிஸ்தவ வாழ்வு வாழ்வதற்காகவுமே என் பதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. ஆகவே, கைநூலின் ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் காணப்படும் ''**என் வாழ்க் கைக்கு**'' ''**வேதாகமத்திலிருந்து**'' **திருச் சபையின் வழிபாட்டிலிருந்து**'' ''**செய்ய வேண்டியவை**'' என்ற பகுதிகளில் குறிக்கப் பட்டுள்ள விடயங்களையும் மாணவர் நன்க றிந்து சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்பத் தங்கள் வாழ்க்கையில் செயல்படுத்த முயற்சிக்க வேண்டும்.

### சிறப்பான குறிப்புகள்.

இவ் வழிகாட்டியில், பாடங்களைப் படிப் பதற்கு உதவக்கூடிய சில குறிப்புகளும், விளக்கங்களும், வினாக்களுக்கு விடைகளும், பயிற்சிகளும் மட்டுமே அளிக்கப்படும். **புத்த கத்திலுள்ளவைகளை நன்றாகக் கற்றுணா ராமல் இவ்வழிகாட்டியால் பயனடைய முடியாது, பரீட்சையிலும் தேற முடியாது என்பதை எல்லோரும் அறிந்திருத்தல் அவ சியம்.**

**பகுதி ''அ.'': மனிதன்மேல் கடவுளின் அன்பு.**

**அலகு 1. கடவுளும் அவரின் குணங் களும்.**

**பாடம் 1. கடவுள் நம்மோடு பேசு ருர்.**

இப் பாடம் ''கத்தோலிக்க திருமறை விளக்கம்'' என்ற நூலின் 4வது பாடமா கும். **சிந்தித்துப்பார் (விடைகள்):** 1). தாம் யாரென்றும், என்ன செய்கிறுரென்றும், நாம் யாரென்றும், என்ன செய்யவேண்டு மென்றும் நமக்கு அறிவிக்கும்படியே. 2) கடவுள் நம்மோடு பேசுவதுதான் தேவ அறிக்கை அல்லது தேவ வெளிப்பாடு. 3) பழைய உடன்படிக்கைக் காலத்தில் பிதாப் பிதாக்கள், இறைவாக்கினர் வழியாகவும், புதிய உடன்படிக்கைக் காலத்தில் இயேசு கிறிஸ்துநாதர், அவருடைய திருச்சபை வழி யாகவும் கடவுள் தம்முடைய அறிக்கைகளைத் தந்துள்ளார். 5) ஞான அறிவு, பக்தி, நன் றியறிதல், ஞான மகிழ்ச்சி என்பன.

### பயிற்சிகள்:

(''ஆ'' பந்தியிலுள்ளதை ''அ'' பந்தியி லுள்ளதோடு பொருத்தி எழுதுக.)

''அ''

1. கடவுள் நம்மிடம் பேசியுள்ளார்
2. கடவுள் பேசும்போது
3. திருச்சபையின் வழியாக
4. நாம் பூரணமாகப் புரிந்துகொள்ள முடியாது
5. அவர் நமக்கு வெளிச்சமும் திடனும் தருகிறுர்

''ஆ''

1. கடவுளின் மறைபொருள்களை
2. அவரது வார்த்தையைப்பெற்று, புரிந்து, செயல்பட
3. நாம் எல்லாவற்றையும் ஒரு புது வெளிச்சத்தில் காண்கின்றேம்.
4. கடவுள் என்னத்தை வெளிப்படுத்தி ஞரென நமக்குத் தெரியும்.
5. இறைமகன் இயேசு வழியாக.

**பாடம் 2. கடவுள் தம் படைப்பின் வழியாய் தம்மையே வெளிப்படுத்துகிறுர்.**

இப் பாடம் ''கத்தோலிக்க திருமறை விளக்கத்தின்'' 6 வது பாடமாகும்.

**சிந்திக்துப்பார்** (விடை): 2) படைக் பட்டவைகளிலிருந்து கடவுளுடைய உள் வாழ்வைப் பற்றியோ, அவர் நமது ஆன்ம மீட்பு சம்பந்தமாக விதித்துள்ள திட்டங் களைப்பற்றியோ நாம் ஒன்றும் அறிய முடி

(10ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இளைஞர் இல்லம்

## இளமையும் கிறீஸ்துவும்

எல். அலோசியஸ்
ஊர்காவற்துறை.

இளமை இறைவன் நமக்களித்த பெருஞ் செல்வம். ஆனால் அது முழு நிலவு தேய்வது போல், எரியும் வர்த்தி எரிந்து அழிந்து விடுவதைப்போல், காலம் செல்லச் செல்லக் கரைந்து போகக்கூடியது. இந்த இளமைக் காலத்தில்தான் ஒருவனுடைய உள்ளத்தில் பற்பல எண்ணங்கள் உதயமாகின்றன. வளரும் பயிரைச் சுற்றி வரம்புகட்டி நெற் பயிரைப் பேணுவது போல் இளமைக்காலத்தில் உதயமாகும் பற்பல எண்ணங்கட்கு குறிப்கோள் என்னும் வரம்பு அமைத்து, வளரும் உயரிய எண்ணங்கட்கு சிந்தனை என்னும் உரமிட்டு, செயல் என்னும் நீர்பாய்ச்சி வளர்க்க வேண்டும். ''இம்'' என்னும் முன்னே இமயத்தைத் தாண்டிடமுடியும் என்பர் சிலர். ''நான் இதைச் செய்தால் அனேக துன்பங்கள் வரும், அனேக பிழைகள் வரும். வயது பற்றாது'' என்று கூறுகின்றனர் பலர். இவர்களைப் பற்றித்தான் புகழ்பெற்ற கருதினால் சுவெனன்ஸ் அடிகளார் தாம் எழுதிய ''சகல சிருஷ்டிக்கும் நற்செய்தி'' (Gospel to Every Creature) என்னும் நூலில் ''வீரமற்ற விவேகம் வீழ்ச்சியின் வித்து,'' என்று குறிப்பிடுகிறார். உலகில் முன்னுக்கு வந்தவர்கள் எல்லோரும் திடீரென உயரவில்லை. பயத்தினால் பலமிழக்காமல் படிப்படியாகவே முன்னுக்கு வந்தார்கள். இவ்விஞ்ஞான காலத்தில் மனிதன் சந்திரனை எவ்விதம் அடைந்தான். பயந்திருந்தால், உறங்கியிருந்தால், சோம்பேறியாய் இருந்திருந்தால் முடிந்திருக்குமா?

எனவே, இளைஞர்கள் உழைப்பு ஓய்ந்து ஒடுங்கக்கூடவே கூடாது. ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும், உணர்ச்சி நிறை ஆர்வத்தோடும் உந்தி எழவேண்டும். நாம் என் பிறந்தோம்? என்ன செய்யப்போகிறோம்? நம்மிடம் எதிர்பார்க்கப்படுவது யாது? என்பதைச் சிந்தித்து அதைச் செயல்படுத்தவும் வேண்டும். மனிதன் பெலவீனம் உள்ளவன் தான். தான் செய்த வேலைக்குரிய சிறப்பை புகழை உடனே பெறவில்லையென்றால், அவன் ஊக்கமிழந்து உணர்விழந்து உணர்ச்சியற்று விடுவதா? தான் செய்யும் செயல் யாவற்றிற்கும் அடுத்த வினாடியே பரிசை எதிர்பார்த்தால் .... ? உலகில் அழியாப் புகழ் பெற்ற ''சாம்ஸனின் துன்பம்'' என்ற காவியத்திற்கு எழுத்தாளர் மில்ரன் பெற்றது நான்கு வெள்ளிக் காசுகள். உலக மேதைகள் காந்தி, ஆபிரகாம் லிங்கன், கென்னடி சகோதரர்கள் இவர்கள் பெற்ற பரிசு ஒரு துப்பாக்கிச்சூடு. ஏன்! மண்ணுலக மக்களின் பாவக்கறையைப் போக்கி விண்ணுலகுக்கு வழிவகுத்த யேசுவை, பல்லோரின் பிணிபோக்கிய பரமனை பிணங்களுக்கு உயிரளித்த உத்தமனை, காற்றையும் கடலையும் அடக்கிய ஆண்டவனை யாம் ஏற்றியது சிலுவையிலல்லவா? எனவே ''நல்லதை நாம் செய்வோம் நடப்பது நடக்கட்டும் நாயகன் யேசுவின் எண்ணம் நிறைவேறட்டும்'' என்ற எண்ணத்தால் உந்தப்பட்டு உழைத்தோமானால், விடுவேனா உம்மை யூத வீரர் பிடிக்க என்று வீரம்பேசி மறுகணம் மறுதலித்து மாற்றானுக்கு பயந்து மறைந்த - கல்வியறிவற்ற – மீன்பிடிகாரனை திருச்சபையின் ஒப்பற்ற தலைவனாக்கியவர் நம்மையும் கைவிடார்.

நம்மில்சிலர் குறிக்கோளற்ற ஆர்வத்தால் உந்தப்பட்டு ஒரு பிழையைக் கண்டு நான் செய்யவேண்டியவேலை இதுவல்லவென அங்கலாய்ப்பர். எனவே, நாம் வாழ்க்கையில் நமக்கென ஒரு பணியை ஏற்குமுன் ''இப்பணியில் இறைவன் எனக்களித்த திறமைகள் அனைத்தையும் பயன்படுத்த வாய்ப்புக் கிடைக்குமா என ஆராய்ந்தபின் தான் அதைச் செயல்படுத்த வேண்டும். கத்தோலிக்க இளைஞராகிய எமக்கு யாம் செய்யும் பணியைவிட மற்றொரு பணியும் இன்றியமையாதது. அதுதான் நமது மங்காக் கடமையாகிய, குருதியோடு குருதியாய்க் கலந்து, மூச்சோடு மூச்சாய் இணைந்திருக்கும் சமயப்பணி. வயிற்

(14ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கிறிஸ்தவ வாழ்வு

( தேவப்பிரியன் )

## 5. பெயரே இல்லாமல் பிறக்கின்றார்... பெயரைக் காக்க எப்பாடு படுகின்றார்...

கதை கேட்பதில் பொதுவாக எல்லாருக்கும் பிரியம் அதிகம் என்பார்கள். ஆனால் மலர்விழிக்கு மாத்திரம் அறிவைத் தெளிய வைக்கும் கருத்துக்களைக் கேட்பதில் பிரியம் இருப்பதை நான் அறிந்து கொண்டேன். கோப்பையைக் கழுவி வைத்ததும் 'வில்லில் இருந்து விடுபட்ட அம்புபோல்' என்னிடம் வந்துசேர்ந்தாள்.

'பெயரின் மதிப்பையும் மாண்பையும் பற்றிக் கூறுவேன் என்று சொன்னீர்களே அப்பா, அதைக் கூறுங்கள்' என்றாள்.

மலர்விழி! நாம் இந்த உலகில் பெயருடன் ஒருநாளும் பிறப்பதில்லை, ஆனால் இவ்வுலகத்தை விட்டுப் போகும் பொழுது மாத்திரம் எப்படியும் எங்கள் பெயரை இவ்வுலகில் நிலை நாட்டிவிட்டுப் போகவேண்டும் என்ற எண்ணம் ஏனோ, வயதாக ஆக, வலுப் பெற்றுக் கொண்டே வருகிறது. இதன் காரணமாகத்தான் ஒரு பெரியார்,

> "பெயரே இல்லாமல் இவ்வுலகில் பிறந்திட்டோம்
> பெயரை யாரோ எமக்கிட்டிட்டார் — இப்
> பெயரைக் காக்க எப்பாடு நாம் பட்டிட்டோம்
> அப்பப்பா! அதை எடுத்துச் சொல்ல என்றால்
> இயலாது"

என்று கூறினார்.

அதாவது, நாம் பிறக்கும் பொழுது பெயர் இல்லாமல் பிறக்கிறோம். அதன்பின் யாரோ எமக்குப் பெயர் கொடுக்கிறார்கள். நாளடைவில் அப்பெயர் நமதாகிவிடுவதால், அதை நாம் எப்படியாகிலும் இவ்வுலகில் நிலை நாட்டியே தீரவேண்டும் என்ற வேட்கையில் தூண்டப்பட்டு, சரியான வழியிலோ, அன்றேல் பிழையான வழியிலோ அதை நிலை நாட்டப் பாடுபடுகிறோம்.

இதற்கு நான் உனக்கு எத்தனையோ உதாரணங்களைக் கூறக்கூடும். தன் பெயர் நிலைத்திருக்க வேண்டுமென்றும், தான் அவ்விடத்தில் இருந்தான் என்று பிறர் அறிய வேண்டுமென்றும் சிலர் தங்கள் பெயர்களை சுவர்களிலும், மரங்களிலும், மலை உச்சியிலும் புகையிரதப் பெட்டிகளிலும், இன்னும் எத்தனையோ இடங்களிலும் எழுதுகிறார்கள். இது பணச் செலவின்றி, பிறர் பொருளைப் பாழ்படுத்தி தன் பெயரை நிலை நாட்டப் பாடுபடுபவர்கள். இன்னும் சிலர் பிறர் அறியத்தான தருமங்கள் செய்து, நன்கொடைகள் வழங்கித் தங்கள்பெயர்களைக் கொட்டை எழுத்துக்களில் எழுதி பெயரை வளர்ப்பார்கள். இவர்கள் சிறுகச் செலவுசெய்து பெருக வாழ நினைப்பவர்கள். இவர்கள் தங்கள் சம்பாவனையை அடைந்து கொண்டார்கள்.

மூன்றாவது வர்க்கத்தைச் சார்ந்தவர்கள் கோவில்களைக் கட்டுவதின் மூலமும், சொரூபங்களைச் செய்து அவற்றின்கீழ் தங்கள் பெயர்ப் பலகையை சொருகுவதின் மூலமும், கோவில்களுக்குத் தானம் வழங்கித் தங்கள் பெயர்களைப் பிறர் அறியச்செய்ய வேண்டும் என்ற நிபந்தனை மூலமும் தங்கள் பெயர்களுக்கு ஒரு நிலையான இடத்தைத் தேடிவிட நினைக்கிறார்கள். இவையெல்லாம் நீரின்மேல் எழுத்தாக, மண்ணோடு மண்ணாகிப் போய் விடும். இவர்கள் கிறிஸ்துநாதர் கூறியது போல், 'மண்ணின் மேல் மாளிகை கட்டிய மடையர்கள் வர்க்கத்தைச் சார்ந்தவர்கள்'. இவர்களுடைய பெயர்கள் ஒருசில காலம் மின்னி மிளிரும். பின்பு புயற்காற்றடிக்க சிதைந்து விழுந்து மிறைந்து காற்றோடு காற்றாய்க் கலந்துவிடும்.

அப்பா, நான் **'கல்கண்டில்'** வாசித்த ஒரு விநோத சம்பவமும் என் நினைவுக்கு வதகிறது. அது என்னவென்றால், தமிழ் நாட்டின் முதல் அமைச்சர் கருணாநிதி தன் பெயரை வளர்க்கப் புதியதொரு முறையைக் கையாளுகிறார், என்று **'கல்கண்டு'** ஆசிரியர் **தமிழ்வாணன்** கூறுகிறார். அதாவது, தான் எழுதியிருக்கும் கதை, கவிதை, கட்டுரை, நாடகம் ஆகியவைகளை முதலமைச்சர் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து நூல்களாகப் பிரசுரித்து வைத்திருக்கிறார். தன்னைக் காண வரும் வெளிநாட்டுப் பிரமுகர்களுக்கெல்லாம் இவைகளைப் பரிசாக கொடுத்துக் கொண்டு வருகிறார். எவ்வளவு நல்ல வேலை என்று பாருங்கள் அப்பா!

(10ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## கிறிஸ்தவ வாழ்வு......

[9ம் பக்கத் தொடர்ச்சி]

ஆம் மலர்விழி, சில பெரியாரையும் இந்தப் புகழ்ச்சி மோகம் தன் வலைக்குள் சிக்க வைத்து விடுகிறது. நான் சொல்வதைக் கேள். உன் பெயர் இவ்வுலகில் நிலையாக நிலைத்துவிட நீ விரும்பினால் ஆபிரகாம் லிங்கனைப்போல், ரவீந்திரநாத் தாகூரைப்போல், பாரதி, காந்தி வினோபாஜீ இவர்களைப்போல் பிறநலத் தொண்டு செய்தால் மக்கள் மனதில் மங்காத இடத்தைப் பெற்றுக் கொள்ளலாம். இவைகளைக்கூறும் பொழுது ஒரு பெரியார் கூறியதும் என் நினைவிற்கு வருகிறது. அதாவது, 'மனிதன் தன் பெயர் நிலைக்க மரத்திலும், கல்லிலும், இரும்பிலும் பல தரப்பட்ட படைப்புக்களைப் படைக்கிறான்; ஆனால் மரத்தில் செதுக்கியதை பூச்சிகள் அரித்து விட்டதும் அவன் எண்ணம் நிறைவேறாமற் போய்விடுகிறது; கல்லில் வடித்ததை மழையும் வெயிலும் சிதைவுறச் செய்து விடுகிறது; இரும்பில் செய்ததையோ தண்ணீரும் காற்றும் சேர்ந்து துருப்படுத்தி தூசாக்கிவிடுகிறது. ஆகவே, உங்கள் எண்ணம் என்றும் இருக்கவேண்டுமென்றால் தூய எண்ணங்களால் மக்கள் மனதில் எழுதுங்கள்; அது என்றும் நிலைத்திருக்கும்' என்கிறார்.

அப்படியாகில் எங்கள் இரட்சகராகிய கிறிஸ்து கூறுகிறாரே ''யார் ஒருவன் தன் உயிரைக் காக்க விரும்புகிறானோ, அவன் அதை இழக்கிறான். என் பொருட்டு தன் உயிரை இழப்பவனே அதைக் காத்துக் கொள்வான்'' என்று.

ஆம், மலர்விழி. நான் இதுவரை கூறியதை நீ அவதானித்திருந்தால் அவையெல்லாம் மக்கள் தங்கள் பெயர்களை இவ்வுலகில் நிலை நாட்ட எவ்வளவு பாடுபடுகிறார்கள் என்பதைப்பற்றி நான் கூறியிருக்கிறேன் என்று நீ உணர்வாய். நமதாண்டவரின் வார்த்தைகள் **நித்திய ஜீவனைக்** குறித்திருக்கின்றன. அதாவது, **நம்மை நாமே மறந்து மற்றவர்களுக்காக வாழும் பொழுது நாம் நித்திய ஜீவனைக் பெற்றுக் கொள்ளுகிறோம்.** இது உண்மையான 'கிறிஸ்தவ வாழ்க்கை' இவ்வாழ்க்கையைத்தான் கிறிஸ்துவை மையமாகக் கொண்ட வாழ்க்கை என்பார்கள். கிறிஸ்துவே அதன் ஆதியும் மையமும் அந்தமுமாக இருக்கிறார்.

"அதைப்பற்றிச் சொல்லுங்கள், அப்பா".
''நிச்சயமாகச் சொல்வேன்''. ★

## கிறிஸ்தவ போதக......

(7ம் பக்கத் தொடர்ச்சி)

யாது. இவை கடவுளுடைய இரகசியங்கள். அவர் நமக்கு வெளிப்படுத்தினால்தான் அவைகளை நாம் அறிந்துகொள்ள முடியும்.

**பயிற்சிகள்:** (இடைவெளிகளை நிரப்புக)

''படைப்பின்..................கண்டு பிரேமை கொள்ளும் மனிதர், அப்படைப்பின்............... அதைவிட மகிமையிற் சிறந்தவர் என்று........ .........................வேண்டும்.''

மனச்சான்றை நாமே நமக்கு.................... அல்லது மற்றவர்களிடமிருந்து ...................... சட்டங்களைத் தந்த பரிசுத்தரும் நேர்மையுள்ள...............................ஒருவர்தான் அந்த மனச்சான்றை நம்முடைய............................. வைத்திருக்கவேண்டும்.

**பாடம் 3 கடவுள் நம்மேல் அக்கறை கொண்டுள்ளார்**

இப் பாடம் ''கத்தோலிக்க திருமறை விளக்கத்தின்'' 7வது பாடமாகும்.

**சிந்தித்துப்பார் (விடைகள்):** 1. மோட்ச பயணத்திற்கு அவசியமான அனைத்தையும் கடவுள் நமக்கு அளிக்கின்றார். நமது வழிக்கு ஒளி வீசுகின்றார், நம்மைத் தூய்மைப்படுத்துகின்றார், நமது பகைவனுகிய பசாசிடமிருந்து நம்மைப் பாதுகாக்கின்றார், இன்னும் மோட்ச உணவையும் நமக்குத் தருகின்றார். 2. கடவுள் தமது எல்லாப் படைப்புகள் மீதும் காட்டும் பரிவும் அக்கறையுமே "**தேவ பராமரிப்பு**'' என்று கூறப்படுகின்றது.

**பயிற்சிகள்:** (கீறிட்ட இடங்களை, ஆள், இடம் அல்லது பொருளின் பெயர்கொண்டு நிரப்புக.)

(அ) ———— ————விட்டு வெளியேறியபோது கடவுள் அவர்கள்முன் ஒரு ————தூணுகச் சென்றார்.

(ஆ) கடவுள்————மக்களுக்கு பாலைவனத்தில்————என்னும் அதிசய உணவையும்.————சுரந்த நீரையும் கொடுத்தார்.

(இ) கடவுள் நம்மை————வழியில் அன்புடன் நடத்தி, நமக்குத் தேவையான ————தந்து————பராமரிக்கின்றார்.

(ஈ) ''கடவுளின் ———— அவருடைய ————முதலில் தேடுங்கள்.''

(உ) எனது நாளாந்த————எல்லாம் எனக்குக் கடவுளின்————நினைவூட்டுகின்றன. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருக்கோணமலை - மட்டக்களப்பு மேற்றிராசனத்தின் 1971ம் ஆண்டுக்குரிய மாற்றங்களும் - நியமனங்களும்.

**திருக்கோணமலை வட்டாரம்:**

வட்டார முதல்வரும், ஆசனக் கோயில் பங்குக் குரவரும்:
அதி வண. G. E. L. வம்பேக் அடிகள்.
சின்னக்கடை, குவாடலூப் மாதா கோயில் பங்குக்குரவர்:
வண. ஜேக்கப் அலெக்ஸாண்டர் அடிகள்.
சீனன்குடா — கந்தளாய் பங்கின் தற்போதய பங்குக் குரவர்:
அதி வண. பசில் சில்வா யே. சு.

**மட்டக்களப்பு வட்டாரம்:**

வட்டார முதல்வர்: மிக வண. பெருந்தகை ஜெரோம் டி சா அடிகள்.
புனிதை மரியநாயகி உடன் — ஆசனக் கோயிலினதும், புனிதர் அந்தோனியார் ஆலயத்தினதும் பங்குக் குரவர்: வண. பீலிக்ஸ் வீரசிங்க அடிகள்.
தாண்டவன்வெளி வியாகுலமாதா பங்குக் குரவர்: வண. பிரான்சிஸ் செலர் அடிகள்.
தன்னாமுனை புனிதர் சூசையப்பர் கோயில் பங்குக் குரவர்:
வண. றேமண்ட் அரசரெத்தினம் அடிகள்.
பெரிய புல்லுமலை செபமாலை மாதா கோயில் பங்கினதும், ஆயித்திய மலை சதா சகாய மாதா யாத்திரைத் தலத்தினதும் பரிபாலகர் வண. நோபட் ஒக்கஸ் அடிகள்.
வாழைச்சேனை சின்னத் திரேசம்மாள் கோயில் பங்குக் குரவர்:
வண. லோ. கு. மரியதாஸ் அடிகள்.
ஹிங்குராக்கொடை கிறிஸ்து அரசர் கோயில் பங்குக் குரவர்:
வண பெலிசியன் பெர்ணண்டோ அடிகள்.
நாவற்குடா, சின்னலூர்து சேத்திரப் பரிபாலகர்: வண ஹென்றி பொன்னையா அடிகள்.

**கல்முனை வட்டாரம்:**

அக்கரைப்பற்று ஆரோகிய மாதா கோயில் பங்குக் குரவர்:
வண. குருஸ் ஞானப்பிரகாசம் அடிகள்.

**வேறு நியமனங்கள்:**

குருக்கள் மனை அதிபரும், மேற்றிராசன உதவிப் பொருளாளரும்:
வண. யோசேப் கொஸ்தா அடிகள்.
''தேவ அழைத்தல் அபிவிருத்தி''த் தலைவர்: வண. ஹென்றி பொன்னையா அடிகள்.
நிலாவெளிப் பங்கில் வேதபோதகத் தொண்டு: வண. அ. செலர் அடிகள்.
பாப்பரசரின் வேதபோதகச் சபைகளின் இயக்குநர்:
அதி வண. G. E. L. வம்பேக் அடிகள்.
செப அப்போஸ்தலச் சபை அதிபர்: (இன்னும் நியமிக்கப்படவில்லை.)

**திருக்கோணமலை — மட்டக்களப்பு மேற்றிராசன ஐக்கிய சங்கத்தின் அத்தியட்சகர்கள்:**

திருக்கோணமலைப் பிராந்தியம்: அதி வண. G. E. L. வம்பேக் அடிகள்.
மட்டக்களப்புப் பிராந்தியம்: வண. பீலிக்ஸ் வீரசிங்க அடிகள்.
கல்முனைப் பிராந்தியம்: வண. ஜோண் பீற்றர் அடிகள்.
சிங்களப் பிராந்தியம்: வண G. கபிரியேல் அடிகள்.

**திருக்கோணமலை வட்டார மரியாயின் சேனை கூரியாவின் ஞான அதிபர்:**

அதி வண. G. E. L. வம்பேக் அடிகள்.

**மாதா சபை அதிபர்கள்:**

திருக்கோணமலை வட்டாரம்: வண. ஜேக்கப் அலெக்ஸாணடர் அடிகள்.
மட்டக்களப்பு வட்டாரம்: வண. பிரான்சிஸ் செலர் அடிகள்.
கல்முனை வட்டாரம்: வண குருஸ் ஞானப்பிரகாசம் யே. ச. அடிகள்.
கல்முனை வட்டார இளைஞர்களின் ஆலோசகர்: வண. இம்மானுவல் சூ. ச. சகோதரர்.

**மேற்றிராசன மறைக்கல்வி அதிபர்:**

வண. B. பார்தலற் யே. ச. அடிகள்.

றே. திருஞானதீபன் அடிகள்,
மேற்றிராணியாரின் செயலாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# கடல்மீது ஒருநாள்

சிஸ். மே. லில்லிஓசா கா. ச.

மாலைச் சூரியன் மஞ்சள் கதிர்களை மலை மீது மெதுவாய் வீசுகிறது. நீண்ட நிழல் மலைச் சாரங்களிலிருந்து கடலில் விழுகிறது. கடல் அவ்வளவு பெரிதல்ல. இயற்கை தன் வண்ணத்தை வரைகிறது. அந்நேரம் கரையிலிருந்து ஒரு படகு புறப்படுகிறது. அலைகள் சலங்கை போல ஒலிக்கின்றன. இருள் பரவுகிறது. படகில் பன்னிரு சீடர் செல்கிறார்கள். தண்டு வலிக்கிறார்கள். இருட்டு நேரம் ஆனால் அவர்கள் அஞ்சவில்லை. கடலிலே பிறந்து வளர்ந்த அவர்களுக்கு கடலிலே ஏது அச்சம்? வீட்டை விட்டு, குடும்பத்தை விட்டு தண்ணீரே தரையாகவும், வானே கூரையாகவும் கொண்டு, இரவுகளை கடலில் மீன் பிடிப்பதற்காகக் கழிக்கிறவர்கள் அவர்கள். இதோ பாய் கட்டி அன்னப் பறவைபோல அழகுடன் அலைகளைக் கிழித்துக் கொண்டு செல்கிறது. அந்தப் படகு.

அந்தப் படகில் ஒருவர் தூங்குகிறார். சற்று முன் தான் தலை சாய்த்தார். அதற்குள் நல்ல தூக்கம். கவலையற்ற மாசற்ற மனமுடைய தூக்கம். நாள் முழுதும் ஓய்வற்ற வேலை. பாவம் களைத்து விட்டார். கூட்டமும் கலைந்தபாடில்லை. திரளான சனங்கள் தம்மைச் சூழ்ந்திருக்கின்றதைக் கண்டு கடலைக் கடந்து அக்கரைக்குப் போகக் கட்டளையிட்டார். குழந்தை தொட்டிலில் தூங்குவது போல் ஆடிச் செல்லும் படகில் களைப்புத் தீரத் தூங்குகிறார். அப்போதும், இப்போதும், பஞ்சுமெத்தையில்லை. படுக்கப் பாயுமில்லை. படகின் பலகை, முரட்டுப் பலகை மட்டுமே கிடைத்தது.

திடீரென்று காற்று, வலுத்த காற்று. திறந்த வெளியிலிருந்து இப்படி வருவது வழக்கம். இது இவர்களுக்குப் பழம் பாடம். ஆனால் அன்றிரவு என்ன கடுமையான காற்று. இன்னும் நிற்கவில்லையே! அதிகரிக்கிறதே! நீடிக்கிறதே! படகு துள்ளியது. பாய் மரம் முறிந்தது. பாய் கிழிந்தது. புயற்காற்று ஊளையிட்டது. அலைகள் படகைத் தாக்கின. தண்ணீரை வாரிப் படகினுள் இறைத்தன. படகு தத்தளித்தது. பேய்க்காற்று நின்றபாடில்லை. படகைக் கவிழ்த்துவிடும் போல் தோன்றுகிறது. ஆனால் அவர் தூங்குகிறார். படகு அழிழ்ந்தப் போகிறது என்று அவர்களே அஞ்சினார்கள். எல்லாருக்கும் ஆபத்து. கொஞ்சமும் ஐயமில்லை. எல்லாம் முடிந்தது போல் தோற்றம். ஆனால் அவரோ நித்திரை செய்து கொண்டிருந்தார். அவர்களுக்கு கை கால் ஓடவில்லை. புத்திக்கு ஒன்றும் புலப்படவில்லை ஆனால் அவர் ஒருவர் தான் தஞ்சம். அவர் ஒருவரே அவர்களைக் காப்பாற்றக் கூடியவர். அவர் எழுந்தால் ஆலோசனை கொடுப்பார். ஊக்கம் அளிப்பார். சமாளிக்க வழிவகை காட்டுவார்; நமது அச்சம் நீங்கும். ''ஆண்டவரே எங்களை இரட்சியும் செத்தோம்'' என்று ஒரே கூச்சல் இட்டார்கள். அவர் எழுந்தார். இயற்கையின் பேயொலி அவரை எழுப்பக் கூடவில்லை. அலைகளின் அபாய ஒலி அவரை எழுப்பக்கூடவில்லை. ஆடும் படகு அவரை அசைக்கவில்லை. ஆனால் தம்மை அண்டி அலறியவர்களின் அபய மன்றாட்டு, அற்ப ஒலி அவரை எழுப்பியது. ஆம்! அன்றும், ஏன் இன்றும், என்றும்தான் மானிடரின் மன்றாட்டு, அவர்களின் அழுகைக் குரல், அபயக் குரல், செபிக்கும் குரல் அவரை எழுப்பும். மானிட மக்கள் என்றால் அத்துணை அன்பு. எழுந்தவர் சூழ்நிலையைக் கண்டார். தமது பாதத்தடியில் பன்னிரு சீடர். பாவம் அவர்கள் அஞ்சிவிட்டார்கள். ''இரையாதே''! என்று ஒரே வார்த்தையில் இயற்கையை அதட்டினார். காற்று அமர்ந்தது. கொந்தளிப்பு நின்றது. கடல் அமைந்தது. எங்கும் ஒரே அமைதி. அவர் அவர்களை அன்புடன் நோக்குகிறார்.

அவர்கள் அவரை வியப்புடன் நோக்குகிறார்கள் அவர் என்ன சொல்லப் போகிறார். ''அற்ப விசுவாசமுள்ளவர்களே ஏன் பயப்பட்டீர்கள். இன்னமும் உங்களுக்கு விசுவாசமில்லையோ?''. எதிர்பாராத கண்டிப்பு. ஆறுதலை அண்டியவர்களுக்கு ஓர் அதிர்ச்சி. விசுவாசமில்லாமலா ''எங்களை இரட்சியும்'' என ஓலமிட்டார்கள்? ஆம்! அவர்களிடம் விசுவாசம் இருந்ததுதான். ஆனால் அவர் விழிப்பாய் இருக்க வேணுமென்று தவறாய் எண்ணிவிட்டார்கள்.'' நான் இல்லாமல் உங்களாலே

[14ம் பக்கம் பார்க்கவும்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# திருப்பம்

புஸ்ப்பம் கவிஞருலகம் கற்பனை செய்யக் கூடிய அளவு அழகியல்ல, அதே நேரத்தில் அழகற்றவளுமல்ல.

அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்கின்ற பெண்ணின் பெருங் குணங்கள் கொண்டவளாக, நல்ல கத்தோலிக்களாக, பெயருக்கேற்ற உத்தமியாக வாழ்பவள்.

இலக்கியத்திலே இலக்கணம் காணக் கூடிய அளவு கற்காவிட்டாலும், பாஷை இலக்கியத்திலே நல்ல தேர்ச்சி பெற்றவள். திருத்தமான உரைகளைக் கேட்டும், பிழைகளற எழுதப்பட்ட பனுவல்களைப் படித்தும் தனது அறிவை நாளாந்தம் அகட்டுபவள். உள்ளூரிலே அவள் அறியாத ''நவல்ஸ்'' களும் அறிஞர் அறிவுரைகளும் இல்லை என்றே கூறலாம். அந்த அளவு துருவி அறிந்து படிப்பவள். இதற்குப் பக்க வீட்டினனான நான் அருந்துணை புரிந்து வந்தேன்.

நான், இளைஞன். திருநீற்றுப் பூச்சின் பரம்பரையினன்.

புஸ்ப்பத்துக்குப் புஸ்தகங்கள் தேடிக் கொடுப்பதில் எனக்கோரின்பம். அவளும் தனக்குக் கிடைப்பதைப் படித்து எனக்கும் படிக்கத் தருவதிலே பேரின்பங் காண்பவள். இப்படி இனந்தெரியாத பாசம் இருவரையும் இணைத்து வளர்த்தது.

ஓடும் நீர், தான் ஓடக்கூடாது என நினைத்தாலுங் கூட பள்ளமானது விட்டு வைப்பதாக இல்லையே. இருவருமே குமரப் பருவத்தினர். எனவே பருவ தாகத்தின் தோற்றம் எங்களிருவரையும் விட்டு வைக்கவில்லை.

புத்தக பரிமாற்றத்தின் ஏற்றம் கருத்தொன்றித்த காதலிலே முடிவு கண்டது.

மடுவுக்கும் மலைக்கும் பேதங்காணுமளவு ''மதம்'' என்கின்ற மாபெருந்திரை இருவர் காதலையும் மறைக்க முன் விழுந்தது.

இந்த மர்மத்திரையால் உருவங்களை மறைக்க முடிந்ததே ஒழிய, ஒருமைப்பட்ட உளநோக்கை ஒழிக்க முடியாது போய் விட்டது.

நித்தம் நித்தம் யேசு மரி சூசை இவர்களின் பொற்பாதங்களை புஸ்ப்பங்கள் இட்டுப் பூசித்து வரும் புஸ்ப்பம் மதமாற்றத்துக்கு இடங்கொடாது இரும்புருப் பெற்றிருந்தாள். ஏனெனில் உண்மை வழி வந்த அவள் ''கிறீஸ்தவள்''

நாதனே! காதலுக்காக மதத்தை விட மனங்கொண்டேன். ஆனால் பெற்றார், உற்றார், சுற்றம் இவர்களின் பரம்பரைப் பண்புக்கு பங்கம் ஏற்படுமே என்கின்ற அச்சம்.

''காதல் காதல் காதல்
காதல் போயிற், காதல் போயிற்
சாதல் சாதல் சாதல்''

என்ற கவிஞர் கூற்றுப்படியும், காதலில் தோல்வி கண்ட இன்றைய இளைஞர்கள் கொள்கையை எதிர்மாறாக்கி, எனக்குண்டான காதலுக்கே சாவுமணி அடித்து காதலுக்கு முற்றிட ஓர் கணம் உன்னினேன்.

ஆனால், சார்பொருள் சாரும் மனம் என்ற மாயக்குரங்கால் இதய எண்ணத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

( அ. இராசேந்திரம், மூதூர் )

ஈற்றிலே இருவர் நோக்கமே ஒரு நோக்காக திருமணத்திலே முடிவு கண்டது. ஆனால் ஒரு மதப்பட்ட திருமணமாக இல்லை. இரு மதப்பட்ட திருமணமாகவே முடிவு பெற்றது.

காலரதம் இரைந்து கொண்டு நிற்கவில்லை. ஓடிக்கொண்டே இருந்தது. வீட்டு வாழ்வும் கடந்து கொண்டே இருந்தது.

புஸ்ப்பம் வீட்டுக்கடமைகளிலே வீரியாக, பத்தாவுக்கேற்றவளாக, குடும்பத்துக்கேற்ற குலவிளக்காக, வாழ்ந்தாள். அன்றியும் தனது படிப்பு நேரத்தையும் விட்டிலள். ஆனால், அதை மட்டுப்படுத்தி ஓய்வு நேரங்களிலே அதிகமதிகமாக வாசித்தாள். அந்த வாசகங்கள் எனது நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் தன்மை பெற்று ஞானபேதங்களாகவே அமைந்தன.

தனது மத ஆதி வரலாறுகள், புதிய ஏற்பாட்டின் பகுதிகள், புனிதர்களின் வரலாறுகள். பிறமதப் பத்தர்களாய் நாஸ்தீகர்களாய் வாழ்ந்து பின் கிறீஸ்து வழிவந்து அவரின் மார்க்கம் பற்றி ஏற்றிப்போற்றி எழுதிய

(16ம் பக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## இறைவழிபாட்டுச்......

(2ம் பக்கத் தொடர்ச்சி)

பாஸ்கா பெருவிழாவின்போதும் அளிக்கப்படுதல் மிகவும் பொருத்தமாகும்.

ஆன்ம ஈடேற்றத்திற்கு ஞானஸ்நானமும் திருச்சபையும் அவசியமென்பது கிறிஸ்துவின் அருள்வாக்குகளிலிருந்து (அரு. 3,5; மாற். 16,16) தெள்ளத் தெளிவாகின்றது. இவ் வாக்குகளின் கருத்து யாதெனில்: மாந்தர் மீட்புப் பெறுதற்கு தண்ணீர் ஞானஸ்நானமும் திருச்சபையும் இறைவனால் ஏற்படுத்தப்பட்ட சாதாரண வழி என்பதாகும். பழைய ஏற்பாட்டில் நோவாவும் அவருடைய குடும்பத்தினரும் ஒரு பேழை வழியாக அழிவிலிருந்து தப்பிக்கொண்ட போல, புதிய ஏற்பாட்டில் மாந்தர் அனைவரும் ஈடேற்றம் அடைதற்கு திருச்சபையென்னும் இரட்சணிய படகில் ஏறிக்கொள்ளவேண்டும். இதற்குத் தண்ணீர் ஞானஸ்நானமே ஏக வழி. ''நோவாவின் பேழையில் நுழைந்து, சிலர்—அதாவது எட்டுப்பேர் — நீரின் வாயிலாகக் காப்பாற்றப்பட்டனர். இந்த நீரானது ஞானஸ்நானத்துக்கு முன் அடையாளம்; இன்று அது உங்களை மீட்கிறது. இந்த ஞானஸ்நானம் உங்கள் உடலின் அழுக்கை நீக்குவதன்று; நல்ல மனச்சாட்சியுடன் கடவுளுக்குத் தரும் உறுதிவாக்காகும்; இந்த ஞானஸ்நானம் மீட்பளிப்பதோ இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வழியாக'' (1 இரா. 3,20–21) என்று தலைமை வரம் பெற்ற அப்போஸ்தலர் விளக்குகின்றார். ''எனவே கத்தோலிக்க திருச்சபை தேவையான ஒன்றாக இயேசு கிறிஸ்து மூலமாக இறைவனால் நிறுவப்பட்டிருக்கிறது என்பதை அறிந்தும் அதில் சேராதிருப்பவர்களும், அதில் நிலைத்துவாழ விரும்பாதவர்களும் ஈடேற்றம் பெற முடியாது'' (திருச்சபை) இ. 14).

அப்படியானால் ஞானஸ்நானத்தைப் பற்றியும் திருச்சபையைப் பற்றியும் அறியாதவர்களின் கதி என்ன? இவ் வினாவுக்கு 2ம் வத்திக்கான் பொதுச்சங்கமே போதிய விளக்கம் கொடுத்துள்ளது. அதை அறிந்திருப்பது நமது கடமையாகும். ''தங்கள் குற்றம் எதுவுமின்றிக் கிறிஸ்துவின் நற்செய்தியையும் அவரது திருச்சபையையும் அறியாதவர்கள் நேர்மையான உள்ளத்துடன் இறைவனைத் தேடி, மனச்சாட்சியின் குரலில் இறைவனின் திருவுளத்தை அறிந்து, ஏற்று, அருளின் தூண்டுதலால் அதை வாழ்வில் கடைப்பிடிக்க முயன்றால், முடிவில்லா மீட்பைப் பெறுவர். மேலும், தங்களது குற்றத்தினாலன்றி வெளிப்படையாக இறைவனை இன்னும் ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கும், இறை அருளின் துணையோடு உண்மை நெறியிலே நடக்க முயல்பவர்களுக்கும், அனைத்தையும் பராமரிக்கும் இறைவன் மீட்புக்குத் தேவையான உதவிகளைத் தர மறுப்பதில்லை. ஏனெனில் அவர்களிடம் காணப்படும் நன்மைகள், உண்மைகள் அனைத்தையும் நற்செய்திக்குத் தயாரிப்பாகவும், மனிதர் வாழ்வைக் கொண்டிருக்கும் வண்ணம் அவர்களுக்கு உள்ளொளி ஊட்டுபவரால் தரப்பட்டனவாகவும் திருச்சபை மதிக்கிறது'' (திருச்சபை இ. 16). ★

## இளைஞர் இல்லம்......

[8ம் பக்கத் தொடர்ச்சி]

றுப்பசி, பொருட்பசி மறைந்துபோகும். ஆனால் கொள்கைப்பசி, குறிக்கோள் பசி, பிறர் நலம் பேணும் பெரும்பசி எமது உள்ளத்தில் என்றும் இருந்து கொண்டே இருக்கும். எனவே, நாம் வாழ்வில் ஏற்கும் பணி சமயத்தொண்டு செய்யக் கூடியதாக மாற்றியமைக்கவேண்டும். நம்முடைய திறமைக்கும், நமக்குக் கிடைத்த கிறீஸ்துவின் அருளுக்கும் ஏற்றவாறு, எத்தொழிலிலும், எவ்விடத்திலும், எவர் மத்தியிலும் கிறிஸ்துவில், கிறீஸ்துவுடன், கிறீஸ்த்துவைப்போல் செயலாற்றத் தெண்டிப்பதே நமது கடன்.

## கடல்மீது ஒருநாள்......

[12ம் பக்கத் தொடர்ச்சி]

ஒன்றும் செய்யமுடியாது'' என்று சொன்ன அவர், தாம் விழித்திருப்பது முக்கியம் என்று ஒருபோதும் சொல்லவில்லையே. சிற்சில வேலைகளில் அவர் தூங்குவார். தூங்குவதைப் போல் தோன்றுவார், நடிப்பார். துன்பம் நம்மை துளைக்கிறது. வறுமை நம்மை வதைக்கிறது. உடல் இச்சைகள் நம்மை பாவச் சகதியில் அமிழ்த்துகின்றன. ஆனால் அவர் இருந்தால் போதும். அவர் எங்கேயோ, அங்கே எப்போதும் வெற்றியே. அவர் நம்மோடு இருந்தால் துன்பத்தில் இன்பம் உண்டு, அழுகையில் ஆறுதல் உண்டு. போராட்டத்தில் வெற்றி உண்டு. ஆகவே, குன்றா விசுவாசத்தோடு, அமிழ்ந்தும் படகும் நம்மை அசைக்க முடியாத விசுவாசத்தோடு முழு நம்பிக்கையை அவர் மேல் வைத்து துன்பத்திலும் இன்பத்திலும் அவருக்காக வாழ்வோமாக. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# உலக சமாதான தின விழா

சென்ற 25-1-71 பிற்பகல் 5-30 மணியளவில், மட்டக்களப்பு கத்தோலிக்க பிராந்திய சபையினரால், பரி. பாப்பரசரின் வேண்டுகோளுக்கிணங்க உலக சமாதான தின விழா மிக சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

மட்டக்களப்பு புனித மரியன்னை ஆலய முற்றத்தில் நடைபெற்ற இவ்விழாவுக்கு திருமலை மட்டுநகர் மறைமாவட்ட ஐக்கிய சங்கத் தலைவர் திரு பொ. இராமலிங்கம் தலைமைவகித்தார் பலசமயத்தவரின் அநுசரணையுடன், எல்லாச் சமயத்தவரும் சமாதானமாக வாழ வழிவகுக்கவேண்டும், என்ற பெரு நோக்கத்துடன் இம் மாநகரில் எடுக்கப்பட்ட முதல் விழா இது என்பது குறிப்பிடத்தக்கது.

திருமதி. சகுந்தலா அருமைநாயகம் அவர்களின் இனிய துதிப் பாடலின் பின், பின்வருவோர் உரையாற்றினர்.

திரு. B. குலசிங்க அவர்கள் (பௌத்தம்)
வித்துவான் சா. கு. கமலநாதன் அவர்கள் (கத்தோலிக்கம்)
மௌலவி. M. M. A. H. முஸ்தபா அவர்கள் (இஸ்லாம்)
திரு. V. குணரெட்டினம் B. A. அவர்கள் (மெதடிஸ்தம்)
திரு S. மௌனகுரு B. A. அவர்கள் (சைவம்)
செல்வன் S. அன்புராசா அவர்கள் (அங்கிளிக்கன்)
மேஜர். M. A. தேவதாசன் அவர்கள் (இரட்சணிய சேனை)

''எல்லா மனிதரும் என் சகோதரர்'' என்ற பரி. பாப்பரசரின் கோட்பாட்டுக்கமைபாக நடைபெற்ற இவ்விழா மட்டக்களப்பு கத்தோலிக்க பிராந்தியசபை உப. தலைவர் திரு. M. W. டிலிமா அவர்களின் நன்றியுரையுடன் முடிவுற்றது.

எஸ். ச. அந்தோனி
செயலாளர்,
மட்டக்களப்பு கத்தோலிக்க
பிராந்திய சபை.

## தொண்டன்

| | |
|---|---|
| வருட சந்தா (தபாற் செலவு உட்பட) | 4-00 |
| 6 மாதங்களுக்கு (தபாற் செலவு உட்பட) | 2-00 |
| தனிப்பிரதி ( ,, ,, ,, ) | -30 |

### விளம்பர விகிதம்
(ஒருமுறை பிரசுரிப்பதற்கு)

| | | |
|---|---|---|
| 3 × 4 | அங்குலம் | ரூ. 10/- |
| 3 × 6 | ,, | ரூ. 15/- |
| 4 × 6 | ,, | ரூ. 20/- |
| 5 × 6 | ,, | ரூ. 25/- |
| 6 × 6 | ,, | ரூ. 30/- |
| 7 × 6 | ,, | ரூ. 35/- |
| 7 × 7 | ,, | ரூ. 40/- |
| 8 × 7 | ,, | ரூ. 45/- |
| 9 × 7 | ,, | ரூ. 50/- |

சந்தாக்களையும், விளம்பரங்களையும் கீழ்வரும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

தொண்டன் நிர்வாகி,
ஆயர் இல்லம், மட்டக்களப்பு.

## "வைரவிழாக் கொண்டாட்டம்"

காணிக்கை மாதா வாலிபர் ஆண்கள் சபை திருகோணமலை அர்ச். மரியாள் தேவாலயப்பங்கில் மாசித்திங்கள் 2ம் நாள் 1909ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இச் சபையே திருகோணமலைப் பங்கில் முதுமை பெற்ற தொன்றாகும். தொடர்ந்து இயங்கிவந்த இச் சபை தற்பொழுது 62 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ளது இதன் ஆரம்ப அங்கத்தவரில் ஒருவர் மூதூர் மாதாசபையின் அங்கத்தவராய் இருப்பதோடு, வட்டார மாதாசபையின் தலைவராகவும் அங்கம் பெறுகின்றார். சென்ற மாசித்திங்கள் 2ம் நாள் எமது சபையின் வைரவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. அன்றுகாலை விசேட பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. மாலை நடைபெற்ற நிகழ்ச்சியில் ''வட்டார மாதா சபைகளில்'' இருந்து 70க்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர்.

மரியாயே வாழ்க!

வி. ஏ. டேவிற்
செயலாளர்
காணிக்கை மாதாசபை (வா. ஆண்கள்)
திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## திருப்பம்——

[13ம் பக்கத் தொடர்ச்சி]

உண்மை உரைகள், இவற்றைத் தேடி உரக் கப்படித்தாள்.

யேசுவின் திருப்பாடுகளின் வரலாறுகளை எடுத்து சிந்தை குளிர, மயிர்க்கூச்செறிய, உள முருகி கண்ணீர் மல்க உருக்கமாக வாசிப் பாள்.

தவிர, இரப்போர்க்கில்லை எனுது வாரி வளங்கும் சகாயத் தாயைத் தனது குறிக் கோள் நிறைவுற உதவிபுரியுமாறு வேண்டி நிற்கவும் பின் நிற்கவில்லை இதற்காக நவ நாள் செய்தாள், ஒறுத்தல் செய்தாள் ஒரு சந்தி காத்தாள்.

அவளின் மேலான முயற்சி வீண் போக வில்லை. உத்தமியின் உயர்ந்த நோக்கை நிறை வாக்க அமலன் திடன் கொண்டார்.

கதிரவன் ஒளிபட கமலங்கள் முகை அவிழ்தல் போல அமலமரியின் அருட்கதிர் கள் எனது இதய மலரை மலர வைத்தன. அஞ்ஞானம் ஒழிந்தது. மெய்ஞானம் பெற் றேன். இப்போது நான் மேதாவி, அருண கிரி அல்ல அருட்பிரகாசம், திருமறைத் தொண்டன். (யாவும் கற்பனை)

---

## கர்தினுல் கூறே...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பதவிக்கு உயர்த்தினுர். இத்தால் நம் செல்வ நாடும் மகிமை எய்தியது.

தமது ஆயர் அபிஷேகத்தின் 25 ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் கருதினுல் பேராயர் கூறே ஆண்டகை அவர்கட்கு எமது உளம் நிறைந்த வாழ்த்துக்களை சமர்ப்பிக் கின்றோம். கடந்த 25 ஆண்டுகளாக இறை வன் அன்னுருக்கு அளித்த எல்லா வரப்பிர சாதங்களுக்கும், அவர் வழியாக கொழும்பு அதிமேற்றிராசனத்திற்கும் இலங்கை முழு வதற்கும் அளித்த சகல நன்மைகளுக்கும் அவருடன் சேர்ந்து இறைவனுக்கு நன்றித் துதி கூறுவதுடன், கொழும்பு அதிமேற்றி ராசனத்திற்கும் இலங்கைக்கும் இன்னும் பல ஆண்டுகள் நற்பணிபுரியும் வண்ணம், உடல், உள்ள உறுதியளித்து வழி நடத்தும்படி இறைவனை வேண்டுவோமாக. ★

---

### எழுத்தாளர் கவனிக்கவும்

உங்களிடமிருந்து தொண்டன் ஏராளமான கருத்துரை, கதை, பாடல்களை எதிர்பார்க் கிறுன். அறிவுரைகள், கதைகள் கருத்துப் பொதிந்தனவாகவும், வாசிக்க, இரசிக்க இயைந்த நடைமுறையிலும் 300 சொற்களுக்கு மேற்படாமலும் இருத்தல் விரும்பத்தக்கது. இதனின் ஒருபக்கம் தெளிவாக எழுதப்பட்டு அல்லது தட்டச்சிடப்பட்டு இருத்தல் மிகவும் நன்று.

— ஆசிரியர்.

முகவரி :—

ஆயர் இல்லம், மட்டக்களப்பு.

---

### புனித இக்னேசியாருக்கு சிலை எழுப்ப நிதி.

யேசு சபைக் குருமார் திருகோண மலை — மட்டக்களப்பு மேற்றிராசனத்தில் 75 வருடம் பணியாற்றியதன் ஞாப கார்த்தமாக மட்டக்களப்பில், யேசு சபையின் ஸ்தாபகர் புனித இக்னேசியஸ் லோயலாவின் சிலையொன்று நிறுவப்பட வேண்டுமெனப் பலரும் விரும்புகின்ற னர்.

சிலையமைக்க யேசு சபைக் குருமார் நடாத்திய கல்லூரிகளின் பழைய மாண வர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களிட மிருந்து பொருளுதவியை எதிர்பார்க் கிறோம்.

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

**மாண்புமிகு வ. தியோகுப்பிள்ளை,**
துணை ஆயர்,
ஆயர் இல்லம், மட்டக்களப்பு.

**A. W. அரியநாயகம்**
செயலாளர்,
தி. ம. மே. ஐக்கிய சங்கம்.

---

இப்பிரசுரம் மட்டக்களப்பு 18, மத்திய வீதியிலுள்ள கத்தோலிக்க அச்சகத்தில, மனேஜர் யோசேப் B. மறே S.S. J. அவர்களால் அச்சிடப்பட்டு, மகா வந். தியோகுப்பிள்ளை, துணை ஆயர், மட்டக்களப்பு. அவர்களால் 1—3—71ல் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media